3. விதி 110-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை

தொடக்கப் பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாக ஆக்குதல் குறித்து ஆய்வு செய்யக் குழு அமைத்தல் பற்றி கல்வி அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்க வேண்டும் என்று அனுமதி வேண்டியுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், உட்காருங்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளிகளில் தமிழைப் பாடமொழியாக ஆக்குவது குறித்து ஆய்வு செய்யக் குழு அமைத்தல் தொடர்பாகத் தமிழ் அறிஞர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்தனர். ஒன்று, தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கல்விக் கூடங்களிலும் 5 ஆம் வகுப்பு வரை தமிழ் மட்டுமே பயிற்று மொழியாகவும், பாட மொழியாகவும் இருக்க வேண்டும். 6 ஆம் வகுப்பு முதல் அனைத்து நிலைகளிலும் ஆங்கிலம் ஒருமொழிப் பாடமாக மட்டுமே கற்பிக்கப்படலாம். 2. பொறியியல், மருத்துவம், சட்டம், தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட உயர்கல்வித் துறைகள் அனைத்திலும் முன்னரே தமிழ் வழிப் பாடநூல்கள் தயாராகவும், அறிமுக நிலையிலும் இருப்பதால் வரும் கல்வி ஆண்டிலேயே அவ்வுயர் கல்வித் துறைகள் அனைத்திலும் தமிழ்வழிக் கல்வியை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். 3. தமிழக அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகள் அனைத்திலும் தமிழ்வழிக் கல்வி பயின்றவருக்கே வேலைவாய்ப்பில் முன்னுரிமை தர வேண்டும்.

மேற்குறிப்பிட்ட 3 கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் அறிஞர்கள் உண்ணாநோன்பு இருந்தனர். அதனையொட்டி நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப்பின், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது வேண்டுகோளினை ஏற்று, உண்ணாநோன்பைக் கைவிடுமாறு தமிழ் அறிஞர்களைக் கேட்டுக்கொண்டார். அதில் தமிழ் அறிஞர்களின் கோரிக்கை குறித்து ஆய்வு செய்ய ஒரு குழு அமைக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். அதன்படி பின்வருபவர்களை உள்ளடக்கிய ஒரு குழு அமைக்கப்படுகிறது. நீதியரசர், திரு. மோகன், குழுத் தலைவர், முனைவர் வ.செ. குழந்தைசாமி, முன்னாள் துணை வேந்தர், முனைவர் ச. முத்துக்குமரன், முன்னாள் துணை வேந்தர், முனைவர் தமிழ் அண்ணல், புலவர் இரா. இளங்குமரன்.

1999 ஏப்ரல் 30] [பேராசிரியர் க. அன்பழகன்]

இந்தக் குழு ஆய்வு செய்வதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு வழிகாட்டிக் குறிப்பினை வழங்கியுள்ளார். Terms of Reference. தமிழ்நாட்டில் கல்வித் துறையில் அனைத்து மட்டங்களிலும் தமிழே பயிற்சி மொழியாக அமைந்திட தமிழக அரசு கொள்கை ரீதியாக விரும்புகிறது. குறிப்பாக, இளஞ்சிறார்கள் பள்ளிகளில் தங்கள் கல்வியை தாய் மொழியாம் தமிழ் மொழியிலேயே பெற வேண்டும் என்றும் தமிழக அரசு விரும்புகிறது. இந்தக் கொள்கையை நோக்கி முன்னேற முதற்கட்டமாக ஓர் ஆணையையும் அரசே பிறப்பித்துள்ளது. எனவே, தமிழ் அறிஞர்கள் வைத்துள்ள கோரிக்கைகளையும், அரசின் சார்பில் வழங்கப்படும் வழிகாட்டிக் குறிப்புகளையும் ஒருசேர அலசி ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள குழு விரைவில் கூடி எவ்வெவ்வகையில் எல்லாம் தமிழ் வளர்ச்சிக்கு வாய்ப்பு இருக்குமோ, அவற்றை ஆய்வு செய்து தங்கள் பரிந்துரைகளை 31-5-1999-க்குள் அரசிடம் வழங்குமாறு வேண்டி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

வீராணம் ஏரி வாய்க்கால்களைப் பொதுப்பணித் துறையின் மூலம் தூர் வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. வீராணம் ஏரியிலிருந்து பிரிந்து செல்லும் வாய்க்கால்களில் வருவாய்த் துறையின்கீழ் வரும் 26 வாய்க்கால்களைப் பொதுப்பணித் துறையின்கீழ் கொண்டுவர வேண்டிய அவசியம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்றார்கள். திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் ஏரியிலிருக்கிற பெரும்பாலான கால்வாய்கள் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. ஆனால் வருவாய்த் துறை அவைகளைச் சீரமைப்பதே கிடையாது. காரணம் அவர்களிடம் போதிய நிதி வசதி இல்லை. எனவே, பொதுப் பணித் துறையே வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் அனைத்துக் கால்வாய்களையும் எடுத்து, அவைகளைத் தூர் வாரி, இரண்டு பக்கங்களிலும் சிமென்டால் lining செய்து, தண்ணீர் விரயமாகாமல் தடுத்து, அவைகளைச் சீர் செய்ய பொதுப்பணித் துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.